IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

SC.NO. 160/2022

Deposition of Witness for P.W.12

| | |
|---|---|
| NAME | - உமாபதி |
| FATHER NAME | - திரு.கோவிந்த ராஜ் |
| VILLAGE | - கீழ் முட்டுகூர் எல்.என். புரம் |
| TALUK | - கே,வி,குப்பம் |
| OCCUPATION | - விவசாயம் |
| AGE | - 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 5வது எதிரி ஆஜரில்லை மனு ஏற்பு.

<u>முதல் விசாரணை–</u>

நான் கீழ்முட்டுகூர் கிராமத்தில் வசித்து வருகிறனே். விவசாயம் செய்து வருகிறேன். கிருஷ்ணன் செல்வி என்கிற சின்னம்மாவை தெரியும். ஏற்கனவே கிருஷ்ணனுக்கும் எதிரிகளுக்கும் நிலம் தொடர்பான பிரச்சனை இருந்தது எனக்கு தெரியும். 10.06.2020 மதியம் 03.30 மணிக்கு பிரகாஷ் போன் செய்தார். அடிபட்டி கிடப்பதாக போன் மூலம் தகவல் சொன்னார். நான் உடனே அங்கு போய் பார்த்தேன் கிருஷ்ணனும் செல்வியும் அடிப்பட்டுக் கிடந்தார்கள். கிருஷ்ணன் அழுதார் அவரை அடித்துவிட்டதாக சொன்னார் யார் அடித்தார்கள் என்று சொல்லவில்லை. செல்வியும் அழுது கிருஷ்ணனுடைய அண்ணன் தாமோதரன் மகன்கள் அடித்ததாக சொன்னார். ஆம்புலன்ஸ் வந்தது சிகிச்சைக்காக அனுப்பிவைத்தோம் போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

முருகன் , காந்தி, பாஸ்கரன், தாமோதரன், மோகன்ராஜ், சரண்ராஜ், நவீன்ராஜ் அனைவரும் சேர்ந்து கிருஷ்ணன் கட்டியிருந்த பம்புசெட்டை கடப்பாறையால் உடைத்துவிட்டு கிருஷண்ன செல்வியை அசிங்கமாக திட்டி நீங்கள் செத்தால் தான் இந்த இடம் தீர்வுக்கு வரும் என்று சொல்லி ஆளுக்கு ஒரு கொம்பால் கை கால் மற்றும் தலையில் கிருஷ்ணன் மற்றும் செல்வியை மாறி மாறி அடித்தார்கள் என்றும் நான் கிருஷ்ணன் செல்விக்கு தண்ணீர் கொடுக்கப் போகும்போது என்னையும் மிரட்டினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

கிருஷ்ணனும் சின்னம்மாலும் என்னிடம் பேசினார்கள் சின்னம்மால் தாமோதரன் மகன்கள் அடித்தார்கள் என்று சொன்ன விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். கிருஷ்ணன் மகன் சத்தியன் எனது நண்பர் என்று நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 15.09.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

15.9.25

Additional District Judge (FTC),
Vellore.